[1972 மார்ச் 4

திரு. ஏ. பாலையா : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளச்சலில் முன்சிப் கோர்ட்டும், இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டும் அமைக்கவேண்டுமென்று ஏதாவது கோரிக்கை வந்திருக்கிறதா ? அரசு அதன் மீது என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது நெல்லையைப்பற்றிய கேள்வி.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவர் அவர்களே, போளூரிலிருந்து வழக்குகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வள்ளியூருக்கும் போளூருக்கும் என்ன சம்பந்தம்? மூலக்கேள்வி வள்ளியூரைப்பற்றியது.

திருமணங்கள் பதிவு.

* 303 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமணங்களைப் பதிவு செய்து கொள்ளும் அதிகாரம் கிராம முன்சிப் அல்லது ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்து திருமணங்களைப் பதிவு செய்து கொள்வதற்கான அதிகாரங்களை திருமணப்பதிவாளர்கள் (Marriage Registrars) நியமித்து அவர்களுக்கு வழங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, திருமணப் பதிவு முறையின் பலன்கள் எல்லாத் தரப்பு மக்களுக்கும் கிடைக்கக் கூடிய நோக்கத்தின் அடிப்படையில் எப்படி ஜனன—மரண பதிவுக்குறிப்புகள் கிராம முன்சிப்களால் பதிவு செய்யப்படுகிறதோ அதைப்போன்று இதையும் பதிவுசெய்ய ஏற்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது இருக்கிற விதிமுறைகளின்படி ஆங்காங்கு இருக்கிற பதிவாளர்கள் இந்து திருமணச்சட்டத்தின்கீழ் பணியாற்றுகின்றவர்கள் பதிவு செய்யலாம் என்று இருக்கிறது. இன்னும் அதிகமான வளவிற்கு

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களின் சுயமரியாதைக் கருத்துக்களை எல்லா மக்களும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் மலிவுப் பதிப்பாக அவற்றை அச்சிட்டு வெளியிடவோ அல்லது பல்லாயிரக்கணக்கான மக்களுக்குப் பயன் படும் வகையில் தமிழக அரசின் தமிழரசு இதழில் வெளியிடவோ அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தந்தை பெரியார் அவர்களின் சுயமரியாதைத் திருமணம்பற்றிய கருத்துக்களை இனிமேல்தான் தமிழ்நாட்டு மக்களுக்கு விளக்கிக் கூறவேண்டிய அவசியமிருக் கிறது என்று நினைக்கவில்லை. தமிழர்கள் எங்கெங்கு வாழ் கிறார்களோ அங்கெல்லாம் சுயமரியாதைத் திருமணங்கள் நடை பெற்று வருகின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்படிப்பட்ட சுயமரியாதைத் திருமணங்களுக்கு ஆகிற செலவு சாதாரணமாக நடைபெறும் திருமணங்கள், ஐயர் வைத்து நடைபெறும் திருமணங்களுக்கு ஆகும் செலவைவிட பத்து மடங்கு அதிகமாக ஆகிறது என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் அவர்கள் சுயமரியாதைத் திருமணத்தை எதிர்க்கிறார்கள் என்பதுதான் பொருளாகிறது, அவர்கள் அப்படிக் கூறுவதிலே வேறு பொருள் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

நிலவள வங்கிகளில் நியமன உறுப்பினர்கள்

* 305 வினு—**திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு நிலவள வங்கிகளில் சம்பந்தப்பட்ட சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்களை நியமன உறுப்பினர்களாக நிய மிக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, நிலவள வங்கிகளில் எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள் இவர்களை உறுப்பினராக நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பொது